**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் 19
## உபத்திரவம் – 13

## இரண்டு சாட்சிகள்

உபத்திரவத்தின் காலம் என அழைக்கப்படும் ஏழு-வருட காலத்தின் நடுவில் இரண்டு சாட்சிகள் வருவதை நாம் காணலாம். இது கிறிஸ்து பூமியில் தன்னுடைய ஆயிர வருட அரசாட்சியை நிறுவுவதற்கு முன்பு இது நடைவேறும்.

ஒரு காகிதச் சுருளை ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்டிருக்கும். அந்த ஏழு முத்திரைகளும் உடைந்த பின் இந்த காலம் ஆரம்பமாகும். முத்திரை கொண்ட அந்த காகிதச் சுருளே பூமியின் பத்திரம் வைப்பு அடைமானமாகும் (Title deed). இந்த நியாயத்தீர்ப்பு காலத்தில் பூமியையும் பிரபஞ்சத்தையும் ஏமாற்றுபவனாகிய சாத்தானிடமிருந்து சரியான வாரிசாகிய இயேசு கிறிஸ்துவிடம் அதை கொடுப்பதே அந்த திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

அந்த ஒவ்வொரு முத்திரை அவிழ நியாயத்தீர்ப்பு உச்சரிக்கப்படும். ஆனால் முத்திரை எண் ஆறுக்கும் மற்றும் ஏழுக்கும் இடையே ஒரு இடைவெளி உள்ளது. இறுதியான மற்றும் மிகவும் கடுமையான நியாயத்தீர்ப்பிற்கு முன்னதான ஏழாம் முத்திரையின் முன் ஒரு இடைவெளி.

விரைவில் இந்த நியாயத்தீர்பிற்கு பின் ஏழு-கலச தீர்ப்புகள் தொடங்கும். ஏழு-முத்திரை நியாயத்தீர்ப்பு ஏழு வருடங்களுக்கு தொடரும். ஏழு-கலச தீர்ப்புகள் நேரத்தின் இறுதியில் ஒன்றுக்கு பின் ஒன்றாக உடனே தொடரும். முந்தய ஏழாம் முத்திரையை போலவே ஏழாம் கலசத்திற்கு முன்னும் ஆறாம் கலசத்திற்கு பிறகும் ஒரு இடைவெளி உள்ளது.

முத்திரைக்கும் கலசத்திற்கும் இடையில் தொடர் நியாயத்தீர்ப்புகள் நடைபெறும். அது முத்திரைகள் போல நீண்ட காலமும் மேலும் கலசத்தை போல சுருக்கமாகவும் நடைபெறாது. இதை ஏழு-எக்காள நியாயத்தீர்ப்புகள் என அழைக்கப்படும். ஆறாம் மற்றும் ஏழாம் எக்காளத்திற்கு இடையே ஒரு இடைவெளி உள்ளது. அதனால், ஒவ்வொரு சமயத்திலும் ஒரு இடைநிறுத்தம், ஒரு ஓய்வு, ஒரு இடைவெளி ஏழாம் மற்றும் முடிவான நியாயத்தீர்புக்கு முன் நடைபெறும்.

மூன்று நியாயத்தீர்ப்புகளின் இடைவெளியின் நோக்கம் ஒன்றுதான். இது அக்காலத்தில் வாழும் பரிசுத்தவான்களை தேற்றுவதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் மட்டுமே. ஏனென்றால் அவர்கள் ஆறாம் முத்திரை, ஆறாம் கலசம் மற்றும் ஆறாம் எக்காளத்தின் நியாயத்தீர்பின் போது அதிகமான பாடுகளுக்குள் சென்றுவிடுவார்கள்.

தீர்ப்புகளின் தீவிரம் மிகவும் கடுமையாக இருப்பதால், அவர்கள் தேவன் கட்டுப்பாட்டில் உள்ளதா? இல்லையா??

மேலும் அவர் எங்கே? என்ற வியப்புடன் இருப்பார்கள்.

ஆதலால், ஒவ்வொரு சமயமும் இறுதியான மற்றும் மோசமான நியாயத்தீர்புக்கு முன், தேவன் நின்று நீண்ட

இடைவெளி விட்டு அவருடயவர்களுக்கு அவருடைய சொந்த கவனிப்பு உள்ளது என்ற உண்மையான ஆறுதலை அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறார்.

இரண்டு சாட்சிகள் என்ற நம்முடைய புதிய பாடத்தை துவங்குவதற்கு முன், நீங்கள் பாடத்தை சரியாக புரிந்து கொள்வதற்கு ஏதுவாக நான் சற்று சுருக்கமாக கூறுகிறேன்.

ஏழு முத்திரைகளும் திறக்கப்பட்டுவிட்டது.

பிரபஞ்சத்தின் மீது நியாயத்தீர்ப்பு நடந்து அவற்றை ஏமாற்றுபவனிடமிருந்து இயேசு கிறிஸ்து திரும்ப பெற்றுக் கொள்வார்.

அந்த திறந்த முத்திரைகள்

- பொய் சமாதானம்,
- போர்கள்,
- பஞ்சங்கள்,
- பூகம்பங்கள்,
- கொள்ளைநோய் மற்றும்
- மரணம்

ஆகியவற்றின் அடிப்படையில் தேவனுடைய கோபம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும்.

பிறகு ஏழு முத்திரைகள் ஏழு எக்காளங்களை விடுவித்தன. இது கீழிருக்கும் அழிவுகளை கொண்டுவரும்,

- மூன்றில் ஒரு பங்கு தாவரங்கள்,
- எல்லா புல்லும்,

- மூன்றில் ஒரு பங்கு கடலும்,
- அவற்றிலுள்ள மூன்றில் ஒரு பங்கு உயிரினங்களும்
- மூன்றில் ஒரு பங்கு கப்பல்களும், ,
- மூன்றில் ஒரு பங்கு சுத்தமான நீரும்,
- மூன்றில் ஒரு பங்கு சூரியனும் சந்திரனும்,
- குழிக்குள் மனிதர்களை வேதனைப்படுத்த ஆயிர வருட (millennium) கட்டப்பட்ட துர்தேவதை (demons) விடுவிக்கப்பட்டு,
- மூன்றில் ஒரு பங்கு மனித இனத்தை அக்கினியால் கொல்லுதல்
- கந்தகம் மற்றும் புகை.

மேலே கூறப்பட்ட அனைத்து காரியங்களும் பூமியின் மீது வரவிருக்கும் இந்த ஏழு வருட காலமான உபத்திரவ காலத்தில் நடைபெறும்.

சாட்சிகள் மனிதர்களை எச்சரித்து மேலும் அவர்களிடம் ஏழாவது எக்காளம் உடனடியாக ஊதப்பட உள்ளது எனக்கூறுவதே ஆகும். அவை உண்மையில் உபத்திரவ காலத்தின் நடுவிலே ஆரம்பமாகும். அதனால் அவர்கள் மனிதர்களை மகா உபத்திரவத்தின் இரண்டாம் பாதியில் நடைபெறும் முத்திரை மற்றும் எக்காள நியாயத்தீர்ப்புகளின் போது எச்சரிக்கை செய்கின்றனர்.

ஆகையால், அவர்கள் அனைவருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்து, எச்சரிக்கையாயிருந்து, மனந்திரும்புவதற்கும், இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கும் அழைப்பு

விடுகிறார்கள். மேலும் அவர்கள் அதை முடிவு வரும் வரைக்கும் தொடர்ந்து செய்கின்றனர்.

இது நமக்கு ஒரு அற்புதமான அறுதல் தரும் உண்மை. ஏனென்றால் மக்களுக்கு சுவிசேஷத்தை கேட்பதற்கான ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்பதை நினைவூட்டுகிறது.

144,000 யூதர்களின் வாயிலிருந்து மட்டுமல்ல இந்த உத்தமமான இரு சாட்சிகள் மூலமும் தான். வேதத்தின் மூலம் இந்த இரண்டு மனிதர்களுக்கு உலகாளாவிய ஊழியம் இருப்பதை நாம் அறியலாம். ஏனென்றால் இந்த முழு உலகமும் அவர்களை காணப்போகிறது என வேத வசனம் கூறுகிறது.

இந்த இரண்டு மனிதர்களும் கடந்து சென்ற பின்னர் ஏழாம் எக்காளம் ஊதப்பட்டு, கலசங்கள் இறுதியாக கடுமையான சீற்றமும் கோபமுடன் ஊற்றப்படும். கிறிஸ்து அர்மகெதோன் போர்களத்திற்கு வந்தவுடன், அதனை தொடர்ந்து தழல் பொருந்திய நியாயத்தீர்ப்பு நடைபெறும். அர்மகெதோன் போர்களத்தில் அனைவரையும் கைப்பற்றி, தேவபக்தி இல்லாதவரை அழித்து, அதன் பிறகு அவருடைய ராஜ்யத்தை அமைக்க இருக்கிறார்.

**வெளி *11:1-6,*** [1] பின்பு கைக்கோலுக்கு ஒப்பான ஒருஅளவுகோல் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது. அப்பொழுது தேவதூதன் நின்று, என்னை நோக்கி: நீ எழுந்து, தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும் அதில் தொழுது கொள்ளுகிறவர்களையும் அளந்துபார். [2] ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிறபிராகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால் அதை அளவாமல் புறம்பாக்கிப் போடு; பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு

மாதமளவும் மிதிப்பார்கள். [3]என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிற வர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ் சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன். [4]பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே. [5]ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்; அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்படவேண்டும். [6]அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லி வருகிற நாட்களிலே மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும் போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

நாம் தேவனுடைய வார்த்தையை அவருடைய வார்த்தையை கொண்டே உணர்ந்துகொள்ளலாம்(*discern*). நம்முடைய புத்திசாலித்தனத்தைக் கொண்டு அல்ல.

இங்கே கொடுக்கப்பட்டுள 3 ½ ஆண்டுகள், 42 மாதங்கள் மற்றும் 1,260 நாட்கள் என்ற காலக்கணக்கை வெளிபடுத்துதல் புத்தகத்தில் நன்றாக விளக்கப்பட்டுள்ளது.

## இரட்டு வஸ்திரம் (Sackcloth) உடுத்திக்கொண்டு

*அவர்கள் ஏன் இரட்டு (Sackcloth) வஸ்திரத்தை கட்டிக்கொண்டு உள்ளார்கள்?*

*இரட்டு வஸ்திரம் (Sackcloth) துக்கத்தை குறிக்கிறது.*

***ஏசாயா 22:12**, சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் அக்காலத்திலே அழவும், புலம்பவும், மொட்டையிடவும் இரட்டுடுத்தவும் கட்டளையிட்டார்.*

***எரேமியா 6:26**, என் ஜனமாகிய குமாரத்தியே, நீ இரட்டைக் கட்டிக்கொண்டு, சாம்பலிலே புரண்டு, ஒரே புத்திரனுக்காகத் துக்கிக்கிறதுபோல மனங்கசந்து புலம்பு; பாழாக்குகிறவன் சடிதியாய் நம்மேல் வருவான்.*

***மத்தேயு 11:21**, கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்.*

***சகரியா புத்தகத்தின் 3ஆம் அதிகாரத்திலுள்ள** பிரதான ஆசாரியனாகிய யோசுவாவின் ஆடைகளை கவனியுங்கள்.*

***சுருக்கம்:***

*வ 1, **நான்காம் தரிசனத்தின் ஆரம்பம்**:*

*யோசுவா: செருபாபேலுக்கு (Zerubbabel) கீழ்முள்ள பிரதான ஆசாரியன்*

*யோசுவா எங்கே இருந்தார்?*
*தேவதூதர்களுக்கு முன் நின்று கொண்டிருந்தார்*

*சாத்தான் என்ன செய்து கொண்டிருந்தான்?*
*அவரை குற்றப்படுத்திக் கொண்டிருந்தான்*

*வ 2, தேவன் சாத்தானிடம் என்ன கூறினார்?*
*அவன் தான் கண்டிக்கப்பட வேண்டும் ஏனெனில் தேவன் எருசலேமை தன்னுடைய நகரமாக தேர்வு செய்துள்ளார்.*

*வ 3, யோசுவா எப்படிப்பட்ட ஆடைகளை அணிந்திருந்தார்?*
*அழுக்கான வஸ்திரங்களை அணிந்திருந்தார்.*

*வ 4, தேவதூதன் என்ன கூறினான்?*
*யோசுவாவின் கிழிந்த ஆடைகளை அகற்றி அவனுக்கு சுத்தமான ஆடைகளை கொடுக்கச்சொன்னான் அப்படியே செய்தனர்.*

*வ 5, அதனால் யோசுவாவிற்கு சுத்தமான பாகையையும் சுத்தமான வஸ்திரங்களையும் தரிப்பித்தார்கள்*

*வ 7, யோசுவாவிடம் என்ன சத்தியம் செய்யப்பட்டது?*
*அவர் தேவனுக்கு கீழ்படிந்தால், அவருக்கு தேவனை அணுகும் வழி கிடைக்கும்.*

*வ 8, இங்கே என்ன தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது?*
*அதாவது தன்னுடைய பணியாளனாகிய “கிளையை” தேவன் வெளி கொண்டு வருவார். யூத தேசம் முறித்து போடப்படும். இயேசுவே அந்த கிளையின் புதிய துளிர்.*

*வ 9, யூதர்கள் முன்னிலையில் என்ன வைக்கப்பட்டுள்ளது? தேவனின் கல், 1 பேதுரு 2:4-5, மத்தேயு 21:42ஐ படியுங்கள்,*

*அந்த கல் என்ன செய்யும்?*
*மக்களின் பாவங்களை நீக்கும்.*

*வ 10, அந்த கல்லின் நாட்களில் மக்கள் என்ன செய்வார்கள்? தங்களுடைய அண்டை வீட்டாரை தேவனுக்குள் வரும்படி அழைப்பார்கள்*

## இரண்டு ஒலிவமரங்கள் மற்றும் இரண்டு குத்துவிளக்குகள்

***சகரியா 4:1-6,*** *[1]என்னோடே பேசின தூதன் திரும்பிவந்து நித்திரை பண்ணுகிற ஒருவனை எழுப்புவதுபோல் என்னை எழுப்பி: [2]நீ காண்கிறது என்னவென்று கேட்டார்; அதற்கு நான்: இதோ, முழுவதும் பொன்னினால் செய்யப்பட்ட குத்துவிளக்கைக் காண்கிறேன்; அதின் உச்சியில் அதின் கிண்ணமும், அதின்மேல் அதின் ஏழு அகல்களும் அதின் உச்சியில் இருக்கிற அகல்களுக்குப்போகிற ஏழு குழாய்களும் இருக்கிறது. [3]அதின் அருகில் கிண்ணத்திற்கு வலதுபுறமாக ஒன்றும், அதற்கு இடதுபுறமாக ஒன்றும், ஆக இரண்டு ஒலிவமரங்கள் இருக்கிறது என்றேன். [4]நான் என்னோடே*

*பேசின தூதனை நோக்கி: ஆண்டவனே, இவைகள் என்னவென்று கேட்டேன். [5]என்னோடே பேசின தூதன் மறுமொழியாக: இவைகள் இன்னதென்று உனக்குத் தெரியாதா என்றார்; ஆண்டவனே, எனக்குத் தெரியாது என்றேன். [6]அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

*மொத்தமாக ஐந்து ஆலயங்கள் உள்ளன. அவற்றில் 3 முந்தய ஆலயங்கள் எருசலேமில் இருந்தது மற்றும் 2 ஆலயங்கள் எருசலேமில் வர உள்ளது.*

1. *சாலொமோனால் (Solomon) கட்டப்பட்டது*
2. *செருபாபேலால் (Zerubbabel) கட்டப்பட்டது*
3. *ஏரோதால் (Herod) கட்டப்பட்டது*
4. *அந்திகிறிஸ்துவால் (Antichrist) கட்டப்படும்*
5. *கிறிஸ்துவால் ஆயிர வருட அரசாட்சியின்போது (millennium) கட்டப்படும்.*

*இங்கே மனித முயற்சியின்றி எண்ணெய் (OIL) தெய்வீக முறையில் வழங்கப்படுகிறது.*

***வெளி** 4:6, அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லிவருகிற நாட்களிலே மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச்சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.*

அதனால் இந்த இரண்டு சாட்சிகளுக்கும் என்ன அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவர்கள் யார் என்பதை குறித்து நாம் இங்கே கொடுக்கப்பட்டுள்ள வசனங்களில் இருந்து நாம் வெளிக்கொண்டுவருவோம்.

## *1.* மழை இல்லை

***1 இராஜாக்கள் 17:1-7,***

*வ1, கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்."*

*இங்கே தீர்க்கதரிசியாகிய எலியா, தன் வார்த்தை தவிர வேறு எந்த மழையும் பனியும் இல்லை என அறிவித்து வானத்தை மூடுவதை நாம் பார்க்கிறோம்.*

*யாக்கோபின் புத்தகம் எவ்வளவு ஆண்டுகள் வானத்தை மூடினார் என்ற கேள்விக்கு பதில் அளிக்கின்றது.*

***யாக்கோபு 5:17-18,*** *[17]எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. [18]மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.*

*அது ஆச்சரியமல்லவா!! 3 ½ ஆண்டுகளுக்கு முன்பும் 3 ½ ஆண்டுகளுக்கு பின்னும் என நேரம் பிரித்து வைத்தல்!!!*

## *2. யார் நீரை இரத்தமாக மாற்றியது?*

*ஆம், அது மோசே தான்.*

***யாத்திராகமம்** 4:9, இவ்விரண்டு அடையாளங்களையும் அவர்கள் நம்பாமலும், உன் வாக்குக்குச் செவிகொடாமலும் இருப்பார்களானால், அப்பொழுது நீ நதியின் தண்ணீரை மொண்டு நிலத்தில் ஊற்றுவாயாக; நதியில் மொண்ட தண்ணீர் வெட்டாந்தரையிலே இரத்தமாகும் என்றார்."*

***யாத்திராகமம்** 7:20, கர்த்தர் கட்டளையிட்டபடி மோசேயும் ஆரோனும் செய்தார்கள்; பார்வோனுடைய கண்களுக்கு முன்பாகவும், அவன் ஊழியக்காரரின் கண்களுக்கு முன்பாகவும் கோலை ஓங்கி; நதியிலுள்ள தண்ணீரை அடிக்க, நதியிலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போயிற்று.*

*நாம் மேலே கூறப்பட்டுள்ளதை பார்த்து அது மோசே மற்றும் எலியா என புரிந்து கொள்ள முடியும்.*

*இந்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்ற இந்த இருவருக்கும் உள்ள பொதுத்தன்மைகளை பார்ப்போம்.*

### *3. தங்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டது (வெளி 4:5)*

***மோசே:***

***எண்ணாகமம் 16:28-29 & 35,*** *[28]அப்பொழுது மோசே: இந்தக் கிரியைகளையெல்லாம் செய்கிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினார் என்றும், அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்லை என்றும், நீங்கள் எதினாலே அறிவீர்களென்றால், [29]சகல மனிதரும் சாகிறபடி இவர்கள் செத்து, சகல மனிதருக்கும் நேரிடுகிறதுபோல இவர்களுக்கும் நேரிட்டால், கர்த்தர் என்னை அனுப்பவில்லை என்று அறிவீர்கள்.*

*[35]அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, தூபங்காட்டின இருநூற்று ஐம்பது பேரையும் பட்சித்துப்போட்டது.*

*இந்த அதிகாரத்தில் என்ன நடந்தது என்ற சம்பவத்தை நீங்கள் அறிவீர்கள். மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக கலகம் ஏற்பட்டது. அதனால், தேவனே தன்னை அவர்களுக்கு ஊழியம் செய்ய அழைத்ததை காண்பிக்க அவர்களை அழைத்தான். வானத்திலிருந்து அக்கினியை அழைத்து அது மக்களை உயிருடன் பட்சித்தது. மனித இறைச்சியை சுடும் முறையை (barbeque) குறித்து மோசே தான் முதலில் செயல் விளக்கமளித்தார்.*

## எலியா:

*2 இராஜாக்கள் 1:10 & 12*

[10] *அப்பொழுது எலியா, அந்த ஐம்பதுபேரின் தலைவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் தேவனுடைய மனுஷனானால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பதுபேரையும் பட்சிக்கக்கடவது என்றான்; உடனே அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பது பேரையும் பட்சித்தது.*

[12] *எலியா அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நான் தேவனுடைய மனுஷனானால், அக்கினி வானத்திலிருந்து இறங்கி, உன்னையும் உன் ஐம்பதுபேரையும் பட்சிக்கக்கடவது என்றான்; உடனே தேவனுடைய அக்கினி வானத்திலிருந்து இறங்கி, அவனையும் அவன் ஐம்பதுபேரையும் பட்சித்தது.*

*இரண்டு தருணத்திலும் எலியா வானத்திலிருந்து அக்கினியை கீழே அழைத்தார் மேலும் அக்கினி கீழே வந்ததை மேலே குறிப்பிட்டுள்ள இந்த இரண்டு பத்தியில் இருந்து நாம் காணலாம்.*

*அவர்களுக்கு எதிராக அவர்கள் மீது பேசியபோது அவர்கள் இருவரும் வானத்திலிருந்து அக்கினியை அழைத்தனர்.*

***வெளி** 4:5, யாரேனும் அவர்களை துன்புறுத்த விரும்பினால், அவர்களுடைய வாயிலிருது அக்கினி வெளியாகி அவர்களுடைய எதிரிகளை விழுங்கியது.*

## *4. இரண்டு சாட்சிகள் கொள்ளை நோயையும் (plague) பஞ்சத்தையும் (famine) கொண்டு வந்தார்கள்.*

*மோசே 10 கொள்ளை நோய்களை எகிப்திய மக்களின் மீது கொண்டுவந்தார் என்பதை யாத்திராகமம் புத்தகத்திலிருந்து 7ஆம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் இருந்து 10 ம் அதிகாரம் வரை நாம் காணலாம்.*

*எலியா ஆகாபு ராஜாவுக்கு எதிராக கூறிய வார்த்தையினால் அங்கு மழையும் பணியும் வராத காரணத்தால் அந்த நிலங்களில் மிகுந்த பஞ்சம் ஏற்பட்டது. (1 இராஜாக்கள் 17-19)*

## *5. இயேசு மறுரூபமானபோது இருவரும் அவரை சந்தித்தனர்*

*மத்தேயு 17:1-8; மாற்கு 9:2-8 மற்றும் லூக்கா 9:28-36.*

***மத்தேயு 17:1-4,*** *[1]ஆறுநாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், [2]அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. [3]அப்பொழுது மோசேயும், எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள். [4]அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்."*

மறுரூபமான மலையின் மீது மோசேவும் எலியாவும் வானத்திருந்து காணப்பட்டார்கள்.

மத்தேயு மற்றும் மாற்கு சுவிசேஷத்தில் அவர்கள் பேசினார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் லூக்கா மட்டும் அவர்கள் பேசியதை எழுதியுள்ளார்.

**லூக்கா** *9:31,* அவர் எருசலேமிலே நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்தைக்குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இயேசுவின் மரணத்தை குறித்தும் அதன் மூலமாய் இயேசு நிறைவேற்றப்போகும் மீட்புக்கான திட்டத்தைக் குறித்தும் பேசிக் கொண்டிருந்தனர்.

அதனால் அவர்கள் மீண்டும் வரப் போகிறார்கள்.

6. **அவர்கள் வருவார்கள் என்று யூதர்கள் இன்னும் நம்புகின்றனர்**

**மத்தேயு** *17: 10,* அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: அப்படியானால் எலியா முந்திவரவேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்படி யென்று கேட்டார்கள்?"

ஏன் இன்னமும் எலியா முதலில் வர வேண்டும் என்று யூதர்கள் நம்புகின்றனர் என சீஷர்கள் இயேசுவிடம் கேட்டார்கள்.

**மல்கியா** *4:5,* இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்குமுன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.

*இன்றும் கூட யூதர்கள் பஸ்கா பண்டிகையை கொண்டாடும் போது அவர்கள் திராட்ச இரசத்தை ஒரு கண்ணாடி குவளையில் ஊற்றி அவர்களுடைய கதவிற்கு வெளியில் வைத்துவிடுவார்கள்.*

*ஏன்?*

*இது எலியா எப்போது வேண்டுமானாலும் வருவார் என்பதை எதிர்பார்த்து செய்யப்படும் ஒரு சைகை.*

*வேதத்தை நாம் சரியாக பார்த்தோம் என்றால் இயேசு தன்னை இரட்சகராகவும் மேசியாவாகவும் ஏற்றுக்கொண்டால் யோவான் ஸ்நானகனே வரவிருக்கும் எலியா என கூறியதை காணலாம்.*

*நாம் அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டால் பிறகு யோவான் ஸ்நானகனே எலியா என்பதை* ***மத்தேயு 11:7-15****இலிருந்து காணலாம்.*

**லூக்கா** *1:17, பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்.”*

## 7. இருவரின் புறப்பாடும் அசாதாரணமானது

*மோசே வியாதியினாலோ அல்லது எந்த காரணத்திற்காகவோ இறக்கவில்லை, தேவனே அவருடைய மரணத்தை அனுமதித்தார்?*

***உபாகமம் 34:5-7,*** [5]அப்படியே கர்த்தரின் தாசனாகிய மோசே மோவாப் தேசமான அவ்விடத்திலே கர்த்தருடைய வார்த்தையின்படியே மரித்தான். [6]அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக்குழியை அறியான். [7]மோசே மரிக்கிறபோது நூற்றிருபதுவயதாயிருந்தான்; அவன் கண் இருளடையவுமில்லை, அவன் பெலன் குறையவுமில்லை.

*தேவ வார்த்தையின் படியே மோசே இறந்தார்!*

*தேவன் அவனுடைய உடலை அடக்கம் செய்தார். அவர் கண் இருளடையவுமில்லை, அவர் பெலன் குறையவுமில்லை. மோசே அந்த மலையின் மீது ஏறி தூர இடங்களை காணும் பலமுள்ளவன் என்பதை இதற்கு முந்தய அதிகாரத்திலிருந்து நீங்கள் காணலாம்.*

*யூதா தன்னுடைய நிருபத்தில் மோசேயின் உடலுக்கு பின்னதான மர்மத்தை பற்றி விளக்கியுள்ளார்.*

***யூதா 1: 9,*** *பிரதான தூதனாகிய மிகாவேல், மோசேயின் சரீரத்தைக் குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப்பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்.”*

*சாத்தான் மோசேயின் சரீரத்தை உரிமையுடன் கேட்க வந்தான். ஆனால், தேவன் தன்னுடைய பிரதான தூதனாகிய மிகாவேலின் மூலம் எடுத்துக்கொண்டார்.*

*ஏன்?*

*மேலும் எலியா புறப்பட்ட விதத்தை பாருங்கள்.*

***2 இராஜாக்கள் 2:11**, அவர்கள் பேசிக்கொண்டு நடந்துபோகையில், இதோ, அக்கினிரதமும் அக்கினிக் குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்.*

*எலியா சுழல்காற்றிலே இறக்காமல் பரலோகத்திற்கு ஏறிப்போனான்.*

## முடிவுரை

*மேலே கூறப்பட்டதில் இருந்து, வரவிருக்கும் இரண்டு சாட்சிகளும் மோசேவும் எலியாவும் என்பதை நாம் மிகவும் நன்றாக புரிந்து கொள்ளாலாம்.*

*அவர்கள் 3 ½ ஆண்டுகள் பிரசங்கித்த பின்னர் கொல்லப்படுவார்கள்.*

*முழு உலகமும் தொலைக்காட்சி மற்றும் இணையத்தின் (Internet) மூலம் இதனை பார்த்து கொண்டிருக்கும்.*

*3 ½ நாட்களுக்கு பின்னர் அவர்கள் மீண்டுமாய் உயிர்த்தெழுந்த பின்னர் ஒரு உரத்த குரல் பரலோகத்திலிருந்து "இங்கே*

ஏறிவா” என கேட்கும். பிறகு அவர்கள் பரலோகத்திற்கு ஏறிப்போவார்கள்.

அந்த நாளில் மிகப்பெரிய பூமி அதிர்ச்சி உண்டாகி 7,000 மக்கள் இறந்து விடுவார்கள். மேலும் உயிருடன் இருப்பவர்கள் தேவ பயத்துடன் அவருக்கே மகிமையை செலுத்துவார்கள்.